This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# குருபிரசாதின் கடைசி தினம்

www.writersujatha.com

## 1

அந்தச் தொழிற்சாலையில் வேலை செய்யும் பத்தாயிரம் பேரில் ஒருவன் குருபிரசாத். வயது 27. சென்ற வருஷம் கல்யாணம். மனைவி கர்ப்பமாக இருக்கிறாள். குரு என்று நண்பர்கள் அவனைக் கூப்பிடுவார்கள். நண்பர்கள் மிகச் சிலரே. உடன் பணிபுரியும் கே.பி. ஸ்ரீனிவாசமூர்த்தி, ஆஞ்சநேயப்பா, டாமினிக் அப்புறம் ரொம்ப யோசித்துப் பார்த்ததில் வீட்டுக்காரரின் மகன் சத்யநாராயணா.

குருபிரசாத் ஏறக்குறைய ஒரு இயந்திரம். தினசரி பஸ்பிடித்து இஷ்டம் இல்லாமல் கவனம். சிரத்தை இல்லாமல் ரிவெட் ரிவெட் ரிவெட் என்று நாள் பூரா ரிவெட் அடிக்கும் ஸீனியர் மெக்கானிக். வேலை செய்து எட்டு வருஷம் அனுபவம் உள்ள மஹா ரிவெட். எட்டு வருஷம் என்ன அனுபவம், ஏதாவதொரு மெஷின் அருகில் மேற்பார்வை ஏதாவது ஒரு பட்டனை அமுக்குதல் ஏதாவது ஒரு பச்சை விளக்கு எரிந்தால் மற்றொரு பொத்தானை அமுக்கி மணியடிக்கிற வரைக்கும் அல்லது சிவப்பை விளக்கு எரியும் வரைக்கும் காத்திருந்து நிறுத்தி... இந்த ரீதியிலேயே இயந்திரங்களின் தவிர்க்க முடியாத மனித அங்கங்களாக நிறைய வேலைகள் ஒரு தொழிற்சாலையில் உள்ளன. இந்த வேலைகளில் ஏழு வருஷம் அனுபவம் உள்ளவன் வெறும் இயந்திரமாகி விடுவான். ஷர்ட்டுக்குள் கைவிட்டு அவன் முதுகில் தடவிப் பார்த்தால் ஒரு சாவி கொடுக்கும் முனை தென்பட்டால் ஆச்சரியப்பட வேண்டாம். குருபிரசாத் ஒரு ஸீனியர் மெக்கானிக் ஒரு தொழிலாளி, தொழிற்சாலையை விட்டு வெளியே வந்தால் ஒருமனிதன் ஒரு கணவன், இவனிடம் பிரசித்தமாக எதுவும் கிடையாது. மிக அழகானவனோ அருமையாகப் பாடக் கூடியவனோ விளையாடக் கூடியவனோ யாதும் இல்லை. கதாநாயகத்தனம் சுத்தமாக அவனிடம் இல்லை. இந்தக் கதையை முழுவதும் ஆக்ரமித்துக் கொள்ளப்போவது குருபிரசாதின் மரணம்.

குரு தொழிற்சாலைக்குச் சேர்ந்தபோதே பத்தொன்பது வயதுக்கு அவனுக்கு ரத்த அழுத்தம் சற்று அதிகமாகத்தான் இருந்திருக்கிறது. அப்போது பரிசோதனை செய்த டாக்டரின் ரத்த அழுத்தக் கருவி சற்றுப் பழுதுபட்டு அதன் புஸ்புஸ் ரப்பர் சாதனங்களில் எங்கோ ஒரு ஊசி ஓட்டை ஏற்பட்டு அவனது அதிகப்படியான ரத்த அழுத்த நிலை அப்போது கண்டுபிடிக்கப்படவில்லை. ரத்த அழுத்த மிகையினால் அவனுக்கு அவ்வப்போது லேசாகத் தலைவலியும் சிற்சில செகண்டுகள் தலைசுற்றலும் ஏற்படுவதுண்டு. ஆரம்ப காலங்களில் அவனுக்கு அது பெரிய தொந்தரவாக இருந்ததில்லை, தலைவலி வரும்போதெல்லாம் தொழிற்சாலையைச் சார்ந்த டிஸ்பென்சரிக்குச் சென்று ஒன்றிரண்டு ஆஸ்பிரின் டிஸ்பிரின் என்று ஏதோ ஒரு ரின்னை விழுங்குவான். தலைசுற்றல் வருகையில் பக்கத்தில் சற்றுப் பிடித்துக் கொள்வான். எப்போதாவது அவன் ரத்த அழுத்தத்தை யாராவது விஷயம் தெரிந்த டாக்டர் சோதித்திருந்தால் உடனே அவர் எகிறிக் குதித்திருப்பார். அவன் டயஸ் டாலிக்கில் இருந்த எச்சரிக்கையைக் கவனித்து உடனே அவனைப் படுக்கையில் வீழ்த்தியிருப்பார். குருபிரசாத் ஒரு தடவை போனது ஒரு ஆர்.எம்.பி. ராயரிடம். இருபது வருஷங்களாகச் சின்ன குழந்தைகளுக்கே வைத்தியம் பார்த்துப் பார்த்து அவர் உலகமும் வயிற்றில் பூச்சி நெளியும் உலகம். உலகத்தின் சகல உபாதைகளுக்கும்